# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

**OS. No. 43/2021 நாள்.19.1.2026**

PW1- திருமதி. சாந்தி க/பெ. திரு. பிரேம்குமார்

பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

தாவா சொத்து துளசிம்மாள் பெயரில் 18.1.1944 பதிவு கிரயம் செய்யபட்ட சொத்து என்றால் ஆமாம். அந்த சொத்து வாரிசுரிமை அடிப்படையில் எனது அப்பா பெரியசாமிக்கு கிடைக்கபெற்றது என்றால் ஆமாம். அதற்கு பிறகு வாரிசு அடிப்படையில் எனக்கும் பிரதிவாதிகளுக்கும் கிடைக்கபெற்றது என்றால் ஆமாம். தாவா சொத்து தவிர வேறு சொத்து இல்லை என்றால் ஆமாம். வா.சா.1இல் என்ன விஸ்தீர்ணம் உள்ளதோ அதில் எனக்கு மற்றும் மற்ற வாதிகளுக்கு 3/5 பாகம் என்றால் ஆமாம். என் அப்பா இறந்தது 1999 என்றால் ஆமாம். அம்மாவுக்கு சுய வருமானம் இல்லை என்றால் ஆமாம். என் அப்பா தாவா சொத்தில் ஒரு பகுதியை 26.12.1995இல் ஒரத்தநாடு ஆர்வி நகரில் வசிக்கும் வெங்கடாச்சலம் என்பவருக்கு 385 சதுரஅடி கிரயம் ஒப்பந்தம் பதிவாதியுள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. அதில் குறிப்பிடபட்டுள்ள காலம் 1995ஆம் வருடம் டிசம்பர் மாதம் 26ஆம் தேதி மேலும் ஒருவருடம் காலநீட்டிப்பு செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் அப்பா இறந்தபிறகு அந்த ஒப்பந்தத்தை நீக்கரவு செய்து 1, 2 பிரதிவாதிகள் பதிவு ஆவணங்கள் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1996, ஜீலை மாதம் 25 ஆம் தேதி என் அப்பா பெரியசாமி தஞ்சாவூர் நாகைரோடு ஜோதிநகரில் உள்ள சோமுத்தேவர் மகன் ஆறுமுகம் என்பவரிடம் பெந்தக கடனாக ரூ.1,15,000 பெற்றிருந்தார் என்றும் அதற்கு பதிவு பெந்தக கடன் பத்திரம் எழுதி கொடுத்திருந்தார் என்றால் தெரியாது. அந்த கடனையும் என் அப்பா இறந்தபிறகு 1, 2 பிரதிவாதிகள் அடைத்து 30.3.2000 த்தில் அப்பா இறந்தபிறகு ஆவணம் பதிவாகியுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் அப்பா ஏபிஆர் பைனான்ஸ் நிறுவனத்தில் ரூ1,30,000கடன் வாங்கியிருந்தார் என்றும் அதுபற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எம்ஜிஆர் மகன் அனந்தராமன் என்பவர் தஞ்சாவூர் முன்சிப் நீதிமன்றத்தில் வழக்கு போட்டிருந்தார் என்றும் என் அப்பா இறந்தபிறகு அவருடைய வாரிசுகள் அந்த வழக்கை தொடர்ந்தார்கள் என்றால் தெரியாது. அந்த நிறைவேற்றுமனுவில்

125/2008இல் என்னுடைய பெயர் 5ஆவதாக உள்ளது என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. என் அப்பா வாங்கிய இந்த கடன்களை நாங்கள் அடைக்கவில்லை என்றால் என் அப்பா வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பின் வந்த பணம் வாடகையிலிருந்து வந்த பணம் ஆகியவற்றின் அடிப்படையில் என் அம்மா அடைத்ததாக எங்களிடம் சொல்லியுள்ளார். என் அம்மா எப்போது இறந்தார் என்றால் 2010. எனது அம்மா கேன்சர் நோய் வந்து இறந்தார் என்றால் ஆமாம். அதற்கு முன்பாகவே என் அப்பா இருக்கும்போதே எல்லோருக்கும் திருமணமாகிவிட்டது என்றால் ஆமாம். நாங்கள் கணவர் வீட்டில் வசிக்கிறோம் என்றால் ஆமாம். 1, 2 பிரதிவாதிகள், என் அம்மா ஆகியோர் தஞ்சாவூரில் வசித்தார்கள் என்றால் ஆமாம். என் அம்மாவின் கேன்சர் நோய்க்கு வினோதகன் மருத்துவமனை, கீர்த்தனா மருத்துவமனை, திருச்சி விஸ்வநாதன் மருத்துவமனை ஆகியவற்றில் சிகிச்சை எடுக்கபட்டது என்றால் ஆமாம். அதற்கு 10 லட்சம் செலவானது என்றால் என் அக்கா திருச்சியில் வசிப்பதால் அவர் வீட்டில் வைத்து திருச்சி விஸ்வநாதன் மருத்துவமனையில் சிகிச்சை எடுக்கபட்டது. என்னால் முடிந்த செலவினங்களை நானும் செய்தேன். 1, 2 பிரதிவாதிகள் மருத்துவமனைக்கு அழைத்துபோனார்கள் என்றால் தெரியாது. திருச்சி மருத்துவமனைக்கு அழைத்து போன ஆவணங்கள் என்னிடம் உள்ளதா என்றால் என்னிடம் இல்லை. அம்மாவுக்கான செலவுகளை செய்தது 1, 2 பிரதிவாதிகள்தான் செய்தார்கள் என்றாலும் நாங்கள் கணவருடன் வெளியூரில் வசித்தோம் என்றாலும் சரியல்ல. 3வது வாதி சுமதி என் அம்மா இறப்பிற்கு தஞ்சாவூருக்கு வரவில்லை என்றால் ஆமாம். தஞ்சாவூரில் லதா என்பரிடம் 4லட்சம் கடன் வாங்கியிருந்தார் என்றும் அதை திருப்பி கொடுக்காததால் தஞ்சாவூருக்கு வரவில்லை என்றால் சரியல்ல. 1வது பிரதிவாதிதான் லதா இறந்தபிறகு அவருடைய மகள் ஜீவிதாவிடம் அந்த தொகையை கொடுத்து அடைத்தார் என்றால் சரியல்ல. தாவா இடத்தில் கடை கட்டினோம் என்று சொல்லியுள்ளோமே கடன் வாங்கி கட்டபட்டது என்றால் ஆமாம். எந்த தேதியில் கடன் வாங்கி கடன் கட்டி முடிக்கபட்டது என்றால் 2013 இல் கட்டி முடிக்கபட்டது. 2013 கடன் கட்டி முடிக்கபட்டது என்பதை காண்ப்பிக்கககூடிய ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியவில்லை. எப்போது கடன் வாங்கபட்டது என்று சொல்லமுடியுமா என்றால் தெரியாது. எவ்வளவு கடன் வாங்கபட்டது, வட்டிவீதம் எவ்வளவு, மாததொகை

எவ்வளவு என்றால் அக்காவுக்குதான் தெரியும். எல்ஜசியில் வாங்கியதாக சொல்லியுள்ளேனே எந்த ஊர் எல்ஜசி என்று பிராதில் சொல்லவில்லை என்றால் ஆமாம். கடன் எதுவும் வாங்கவில்லை என்றும், 1, 2 பிரதிவாதிகளின் சொந்த செலவில் கடன் வாங்கி கடைகள் கட்டபட்டது என்றும் அதனால்தான் மேற்படி விபரம் எனக்கு தெரியவில்லை என்றால் ஆமாம். கடன் வாங்கியதிலிருந்து கடன் கட்டுவதற்கு மூன்று ஆண்டுகள் ஆகியிருக்குமா என்றால் 1, 2 ஆண்டுகள் இருக்கும். தெலுங்கன்குடிகாட்டை சேர்ந்த கைலாசம் என்பவரிடம் ரூபாய் 7லட்சம் கடன் வாங்கியும் மேற்படி கடைகள் கட்டபட்டது என்றால் எனக்கு தெரிந்து என் அம்மா கைலாசத்திற்கு என் அப்பா பணத்திலிருந்து கொஞ்சம் பணம் கொடுத்தது தெரியும். என் அப்பா பணம் எவ்வளவு என் அம்மா வைத்திருந்தார் என்றால் தெரியாது. என் அம்மா பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றும் 1, 2 பிரதிவாதிகள் அவருடைய சுய சாம்பாத்தியத்தை கொண்டு அந்த கடனை அடைத்தார் என்றால் சரியல்ல. கடை எல்லாம் ஒரே அளவு என்றால் வேறுவேறு அளவு, அளவுகள் எனக்கு தெரியாது. முதல் கடையில் டீக்கடை ஆறுமுகம் வைத்துள்ளார், 2வது கடையில் ஜெராக்ஸ் ஒருவர் வைத்திருந்தார் பின்பு ஒருவர் மாறிவிட்டார் என்றால் சரிதான். 4,5 கடையில் யார் உள்ளார் என்றால் தெரியாது. எல்லா கடையும் ஒரே அளவுதான் என்றும் ஒரு ஒரு கடைக்கு ரூ2500 வாடகை என்றால் சரியல்ல. முதல் இரண்டு கடைகளுக்கும் 30000 வாடகை என்று சொல்லியுள்ளேனே அதற்கு ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வேறு கடைகளுக்கும் வாடகை என்ன என்பதை காண்பிக்க ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2021இல் இந்த தாவா தாக்கல் செய்யபட்டது என்றால் ஆமாம். கடை கட்டி முடிக்கபட்ட 2013க்கு பிறகு 9வருடங்களாக நான் வாடகை கேட்கவில்லை என்றாலும் அதற்கு காரணம் என்ன என்றாலும் 1, 2 பிரதிவாதிகள் சொந்த சாம்பாத்தியத்தை கொண்டு தனியாரிடம் வாங்கிய கடனை கொண்டு கட்டியதால் கேட்கவில்லை என்றால் என் தம்பியிடம் என் அக்கா மகனும் என் மகனும் கேட்டதற்கு என் தம்பி நீங்கள் கோர்ட்டில் போட்டு வாங்கி கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டான். ஏற்கனவே அம்மா இருக்கும்போதே வாய்மொழியாக பாகமாகி தாவா சொத்தின் முன்பகுதி 1, 2 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கிவிட்டார் என்றும் அதன் அடிப்படையில் அவர்கள் சுய வருமானத்தின் அடிப்படையில் கடை

கட்டினார்கள் என்றும் அதனால் வருமானத்தை கோரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எந்த தேதியில் என் மகனும், அக்கா மகனும் போய் தம்பியிடம் போய் கேட்டார்கள் என்றால் ஞாபகமில்லை. அவ்வாறு யாரும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. அப்பா வாங்கிய கடனை அடைத்தது 1, 2 பிரதிவாதிகள் என்றும் நாங்கள் அடைக்கவில்லை என்றால் சரியல்ல. கடனை அடைக்காமல் சொத்தில் பாகம் கேட்பது முரணானது என்றால் சரியல்ல.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.01.19 18:18:26 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**